30 NOV 2023

தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

---

செயல்முறை ஆணை எண். 5123/டி3/2022, நாள்: 18.11.2023

பொருள்: நிருவாகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை – (லேட்) திரு.அ.முத்துசாமி, பதிவுரு எழுத்தரின் வாரிசுதாரர் (மகள்) திருமதி.மு.சபிதாமணி, என்பவருக்கு கருணை அடிப்படையில் கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – ஆணையர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3ப) எண்.36. உயர்கல்வித் (சி2)த் துறை, நாள் 30.10.2023.

---

பார்வையில் காணும் அரசாணையில், கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 31.01.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி.மு.சபிதாமணி, என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 31.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)–ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 31.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை (அசல்)

ஒம்/– கொ. வீர ராகவ ராவ்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

பெறுநர்
திருமதி.மு.சபிதாமணி,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை (முதல்வர் வழியாக)

நகல் :
முதல்வர்,
அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை
டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/11/2023
உதவி இயக்குநர் (நிருவாகம்)

8.12.2023

முதல்வரின் நேர்முக உதவியாளர்
அரசினர் பொறியியற் கல்லூரி
கோவை - 641 013

20.11.2023

## சுருக்கம்

உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி –கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்து மறைந்த திரு.அ.முத்துசாமி, என்பவரின் வாரிசுதாரர் (மகள்) திருமதி மு.சபிதாமணி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## உயர்கல்வி (சி2) த் துறை

அரசாணை (3 ப) எண்.36 நாள்: 30.10.2023

சோபகிருது வருடம், ஐப்பசி - 13

திருவள்ளுவர் ஆண்டு - 2054

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.5123/டி3/2022, நாள். 20.06.2022.
3. அரசு கடித எண். 5532 / ஜி2/ 2023-1, மனித வள மேலாண்மைத் துறை, நாள். 20.09.2023.

----

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில், கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் பதிவுரு எழுத்தராக பணியாற்றிய திரு.அ.முத்துசாமி என்பவர் பணியிலிருக்கும் போது 07.12.2015 அன்று பணியிடை மரணமடைந்து விட்டதால், அவரது மனைவி திருமதி மு.பாப்பாத்தி என்பவர் தனது மகள் திருமதி மு.சபிதாமணி, என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 10.08.2016 அன்று விண்ணப்பித்தார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து

..2...

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. இவர் எஸ்.எஸ்.எல்.சி. மார்ச்-2007-ல் தேர்ச்சி பெற்றுள்ளார். அன்னாரின் பிறந்த தேதி 22.07.1992 ஆகும். திருமதி மு.சபிதாமணி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணை எண்.62108/டி3/2016, நாள்.24.01.2022-ன்படி பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. திருமதி மு.சபிதாமணி கோவை, அரசினர் பொறியியற் கல்லூரி 31.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திருமதி மு.சபிதாமணி என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 31.01.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. தொழில்நுட்பக் கல்வித் துறையில் கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் பதிவுரு எழுத்தராக பணியாற்றிய திரு.அ.முத்துசாமி என்பவர் 07.12.2015 அன்று பணியிடை மரணமடைந்ததையடுத்து கருணை அடிப்படையில் கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி மு.சபிதாமணி, என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 31.01.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்ய அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

...3...

3. இவ்வரசாணை மனிதவள மேலாண்மைத் துறையின் efile 1434 /2023/C2/உயர்கல்வித் துறை, நாளின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை-25.
முதல்வர், அரசினர்பொறியியற் கல்லூரி, கோவை
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
சம்பந்தப்பட்ட தனியர்
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)

<u>நகல்</u>
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,
உயர்கல்வித் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

30/10/2023
பிரிவுஅலுவலர்.

30/10/2023